சுருக்கம்

பணியமைப்பு – நெடுஞ்சாலைத்துறை – தமிழ்நாடு நெடுஞ்சாலை பொறியியல் பணிகள் – தகுதி பெற்ற கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 47(1) இன்படி சிறப்பு தலைமைப் பொறியாளர் / தலைமைப் பொறியாளராக தற்காலிக பதவி உயர்வு மற்றும் பணியமர்வு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.கே.1) துறை

அரசாணை (ப) எண்.46

நாள் 30.05.2026
பராபவ வருடம், வைகாசி - 16,
திருவள்ளுவராண்டு – 2057

படிக்கவும்

முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை அவர்களின் கடித எண்.01 / கமுக்கம்.1 / 2026, நாள் 18.05.2026.

.........

ஆணை:-

தலைமைப் பொறியாளர் பணியிடத்திற்கு தகுதி பெற்றுள்ள கண்காணிப்புப் பொறியாளர்களில் பணிமூப்பில் முதலாவதாக உள்ள திருமதி. M.S.செல்வி, கண்காணிப்புப் பொறியளார்(நெ), சென்னை - கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டம், திருச்சி அவர்கள் 31.05.2026 அன்று பணி ஓய்வு பெற உள்ளதால், துறைத் தலைவர் அந்தஸ்தில் ஓராண்டு பணிக்காலம் இல்லாததால், அரசாணை (நிலை) எண்.440, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்த (Per-S) துறை, நாள் 26.10.1990இல் வழங்கப்பட்ட ஆணையின்படி திருமதி. M.S.செல்வி, கண்காணிப்புப் பொறியளார்(நெ), சென்னை - கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டம், திருச்சி அவர்களுக்கு, சிறப்புத் தலைமைப் பொறியாளராக, தற்போது பணிபுரியும் பணியிடத்தில் பதவி உயர்வு வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

2. மேலும், கண்காணிப்புப் பொறியாளர் பதவியில், முதுநிலையில் இரண்டாவதாக இடம் பெற்றுள்ள திரு. A.வெங்கடாச்சலம், கண்காணிப்புப் பொறியாளர் அவர்கள் தலைமைப் பொறியாளர் பணியிடத்தில் பதவி உயர்வு

(த.பி.பா)

பெற தகுதி பெற்றுள்ளதால் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 47 (1) இன்படி தலைமைப் பொறியாளராக தற்காலிக பதவி உயர்வு வழங்கி, தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகத்தில் (State Industries Promotion Corporation of Tamil Nadu) அயற்பணியில் பணியமர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

3. தற்காலிக பெயர் பட்டியலுக்கு பரிசீலிக்கப்படும் அலுவலர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கைகள் / குற்றச்சாட்டுகள் / தண்டனைகள் / ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை குறித்த விசாரணைகள் ஆகியன குறித்த விவரங்கள் ஆய்வுப் படிவங்களில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. தற்காலிகமாக பதவி உயர்வு அளிக்கப்படும் கண்காணிப்புப் பொறியாளர்களை 2026 - 2027 ஆம் ஆண்டிற்கான தலைமைப் பொறியாளர் பதவிக்கான தேர்ந்தோர் பெயர் பட்டியல் தயார் செய்யப்படும் போது, அத்தேர்ந்தோர் பெயர் பட்டியலில் சேர்த்து முறைப்படுத்தலாம்.

4. மேலே பத்தி 1 மற்றும் 2இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள், மேற்படி உயர் பதவியில் ஊதியத்தை நிர்ணயிக்கும் நோக்கத்திற்காக, பதவி உயர்வு பெற்ற சிறப்பு தலைமைப் பொறியாளர் / தலைமைப் பொறியாளர் பதவியை வகிக்க முழுத் தகுதி பெற்றவர்கள் என்றும் சான்றளிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆர். செல்வராஜ்
அரசு செயலாளர்

பெறுநர்
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (SIPCOT),
சென்னை - 600 008.
முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை,
சென்னை-600 025.
சம்பந்தப்பட்ட அலுவலர்கள்.
(முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை,
சென்னை-600 025 வழியாக)

நெடுஞ்சாலைத் துறையின் அனைத்து தலைமைப்
 பொறியாளர்கள், சென்னை
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு/தெற்கு),
 சென்னை - 600008/600035.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், தலைமைச் செயலகம்,
 சென்னை - 600009.
மாநில கணக்காயர், சென்னை - 600 018.

நகல்:

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம்,
 தலைமைச் செயலகம்,சென்னை - 600 009.
மாண்புமிகு அமைச்சர் (பொதுப்பணிகள் மற்றும்
 விளையாட்டு மேம்பாடு) அவர்களின் சிறப்பு நேர்முக
 உதவியாளர், சென்னை-600 009.
அரசு செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர்,
 நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை,
 சென்னை-600 009.
அரசு இணைச் செயலாளர் (பணிகள்) அவர்களின்
 நேர்முக உதவியாளர், நெடுஞ்சாலைகள் மற்றும்
 சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை - 600 009.
அரசு இணைச் செயலாளர் (திட்டம்) அவர்களின்
 நேர்முக உதவியாளர், நெடுஞ்சாலைகள் மற்றும்
 சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை - 600 009.
அனைத்து அலுவலர்கள் / அனைத்து பிரிவுகள்,
 நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை,
 சென்னை - 600 009.
உதிரி நகல் / இருப்புக் கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

30/5/26
அரசு சார்புச் செயலாளர்

30/05/26